# மாணிக்கவாசகர் காட்டும் உவமையணி

# An Illustration by Manikkavasaka

**இர. சரவணன்**
தமிழாசிரியர்
தியாகராசர் நன்முறை மேல்நிலைப்பள்ளி
மதுரை

**R. Saravanan**
*Tamil Teacher*
*Thiagarajar Model Higher Secondary School*
*Madurai*

## ஆய்வுச் சுருக்கம்

*மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் காணலாகும் செய்தியானது, உருகாதவரையும் உருகச் செய்யும் ஆற்றலுடையது. திருவாசகத்தைப் பயில்வோருக்குத் தேனை உண்டு களித்த இன்பம் பெறலாம் என்கிறது. பேரானந்தத்தேன் இறைவனின் திருவடியிற்கீழ் சொரியக்கூடியது, அதைப் பருகும் வழியினைக் காட்டுவதே திருவாசகமாகும். அவ்வகையில் ஒப்புடை இருபொருள்களைச் செப்புவது உவமை. ஒன்றை விளக்க அதனோடு ஒத்த பிறிதொன்று கூறப்படும். உவம உருபும் இடையில் வரும் பண்பு, தொழில், பயன் பற்றிய பொதுமையடிப்படையில் உவமை கூறப்படும். அதனை மாணிக்கவாசகர் பாடலின் வாயிலாக அறிவதே இவ்வாய்வின் நோக்கம். மாணிக்கவாச கர் இறைவனை அடைய எடுத்துக்கொள்ளும் மார்க்கமானது ஒன்றை உவமைப்படுத்தியே கூறிச் செல்வது சிறப்பாகும். அவருடைய பாடல்களில் அமையப்பெற்ற உவமையின் சிறப்பினை இக்கட் டுரை எடுத்தியம்புகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *நீதிநெறிவிளக்கம், ஆசாரக்கோவை, ஒழுக்கம், சிற்றின்பம், தீயசெயல்கள்.*

## Abstract

*The message found in Thiruvasaka sung by Manikavasaka has the power to melt even the unmelted. It is said that those who study Thiruvasaka can get the pleasure of eating honey. Thiruvasaka is to show the way to drink the bliss that can be poured under the Lord's feet. In this way, the comparison of two related objects is simile. To explain one, a corresponding division is said. A parable is told on the general basis of character, profession, utility that comes between the figure and the figure. The purpose of this study is to know it through the song of Manikavasakar. It is better to describe the path that the reader of Manikkava takes to reach the Lord. This article takes advantage of the parables in his songs.*

***Keywords:*** *Thiruvasakam, Uvamaiyin Chirappu, Thirumuraigal*

**Citation**

Saravanan, R. "An Illustration by Manikkavasaka." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 95–102.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20096747*

**முன்னுரை**

*மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் திருவாசகம் என்றும் சைவ வேதம் என்றும் போற்றப்படுகின்றன. தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்பதனை உறுதியாக உணர்த்தும் நூல் திருவாசகம் ஒன்றே எனலாம். பலர் போற்றச் செய்யப்பெற்றது அன்று இந்நூல், பலர் வாழச் செய்யப்பெற்றது. ஆதலால் அமிழ்தினும் இனிய தமிழிலே இந்நூலை ஆக்கினார் எனலாம். அவ்வகையில் திருவாசகப் பகுதியிலே அமைந்த உவமைநயங்கள்பற்றிய செய்திகளைவிளக்குகிறது. தமிழில் உவமையணியேஅடிப்படையாக அமைவதைத் தொலகாப்பியர் பொருளதிகாரம் உவமையியலில் விளக்குகின்றதை அறியலாம். ஒரு பொருளை எதாவது ஒரு வகையில் தொடர்புடைய இன்னொரு பொருளோடு ஒப்பிடுதல் உவமை அணி எனப்படும்.*

*எந்தப்பொருளின் இயல்பை அறிய வேண்டுமோ அதை உவமானம் என்பார். எந்தப்பொருள் முன்னதன் பொருளை அறியக் காரணமாக இருக்கின்றதோ அதாவது உவமிக்கப்படுகின்றதோ அது உவமேயம் எனப்படும். அவ்வகையில் திருவாசகத்தில் அமைந்துள்ள உவமையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*

**உவமை விளக்கம்**

*பண்பு, தொழில், பயன் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒன்றாகவும், பலவாகவும் வந்து பொருளோடு பொருள் பொருந்துமாறு வைத்து ஒப்புமை தோன்றும்படி கூறுவதே உமையணியாகும். உவமை தோன்றுவதற்கு அடிப்படையானவை மூன்று வகையான நிகழ்வுகள் ஆகும். பண்பு உவமை, பயன் உவமை, தொழில் உவமை*

*பண்பு உவமை எனப்படுவது ஒரு பொருளின் குணமாகிய பண்பை இன்னொரு பொருள் கொண்டு உவமித்துக் கூறுவதாகும். இஃது ஒன்றன் வண்ணம், வடிவம், அளவு போன்றவற்றின் அடிப்படையில் தோன்றலாம். பவழத்து அன்ன மேனி (குறுந்தொகை, கடவுள் வாழ்த்து) பவழம் போன்ற நிறம் உடைய உடம்பு பவளம் என்பது உவமை உவமானம், உடம்பு என்பது பொருள் ஆகும்.*

*ஒரு பொருளின் தொழிலை அதனொடு தொடர்புடைய இன்னொரு பொருளின் தொழிலோடு ஒப்பிடுவது தொழில் உவமை ஆகும்.*

***அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்***
***திருமா வளவன் (பட்டினப்பாலை, பா.அ.298-299)***

*ஆண் சிங்கத்தின் ஆற்றலைப் போன்று பகைவர்க்கும் துன்பம் தரும் வலிமையும் செல்வப் பெருமையும் உடையவன் கரிகாற்சோழன் என்று உணர்த்துகிறது. சிங்கத்தின் ஆற்றல் என்றும் தொழில் கரிகாற்சோழனுக்கு உவமிக்கப்படுகிறது. அரிமா- உபமானம். வளவன் - உபமேயம்.*

***களிற்று இரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்***
***ஒளித்து இயங்கும் மரபின் வயப்புலி போல***

***(அகநானூறு, 22 ;14-15)***

*தலைவியைத் துய்க்க வரும் தலைவன் தன் உணவாகிய யானையை ஆராய்ந்து பார்த்துச்சாய்ந்த பார்வையுடன் செல்லும் வலிமைமிக்க புலிபோல் யானையைக் கொல்லவரும் புலியினை ஆராய்ந்துப் பார்த்தல் சாய்ந்து பார்த்தல், செல்லுதல் போன்ற தொழில்கள் இவ்வுவமைக்குள் வந்துள்ளன. ஒன்றால் ஏற்படக்கூடிய பயன் இன்னொன்றுக்கு ஒப்புமைப் படுத்திக் கூறுவது பயன் உவமை ஆகும்.*

***மாரி அன்ன வண்மைத்***
***தேர்வேள் ஆயைக் காணிய சென்மே*** ***(புறநானூறு ,133 ; 6-7)***

*மழையைப் போன்ற கொடைத்தன்மை உள்ளவன் ஆய் என்னும் வள்ளல் தேரைச் செலுத்துவதில் வல்லவன் என்று கூறப்படுகிறது.*

**உவமை பலவகையில் வருதல்**

*உவமைகள் பயன்படும் போது,*

1. *ஒரு பொருளோடு ஒருபொருள் உவமை*
2. *ஒரு பொருளோடு பல பொருள் உவமை*
3. *பல பொருளோடு பல பொருள் உவமை*
4. *பல பொருளோடு ஒரு பொருள் உவமை*

*என நான்கு நிலையில் வருவதை அறியலாம்.*

**ஒரு பொருளோடு ஒரு பொருள் உவமை**

*ஓர் உவமைக்குள் ஒரு பொருள் மட்டுமே உபமேயமாக வருவது இப்பகுப்பில் அடங்கும்.*

**ஒரு பொருளோடு பல பொருள் உவமை**

*ஓர் உவமைக்குள் பல பொருள் உபமேயமாக வருவது இப்பகுப்பில் அடங்கும்.*

**பல பொருளோடு பல பொருள் உவமை**

*பல பொருள்களுக்குப் பல பொருள் உவமையாக வருபவை இப்பகுப்பில் அடங்கும்.*

***சுறவினத்து அன்ன வாளோர் மொய்ப்ப*** ***(புறநானூறு, 13;7)***
***சுறாமீன் கூட்டத்தை ஒத்த வாள்வீரர்கள்***
***சுறாமீன்கள் - உவமை*** ***(பன்மை)***
***வாள்வீரர்கள் - உபமேயம்*** ***(பலர்)***

**பல பொருளோடு ஒரு பொருள் உவமை**

*பல பொருள்களுக்குப் உபமேயமாக வரும் பொழுது ஒரு பொருள் உவமையாக வருபவை இப்பகுப்பில் அடங்கும். பெரு வளக் கரிகால் முன்னிலைச் செல்லார் (அகநானூறு,125;18), பீடுஇல் மன்னர் போல(அகநானூறு,125;20), ஓடுவை மன்னால் வாடை நீ எமக்கே (அகநானூறு, 125;21) பெரும் புகழை உடைய கரிகாற்சோழன் முன்னர்ச் செல்லாத வீரமற்ற மன்னர்கள் போல வாடைக்காற்றே என் முன்னால் நில்லாது ஓடுவாய் என்று விளக்கப்படுகிறது. ஒன்றில் பல வருதல்.*

*ஒரு பொருளுக்கு ஒரு பொருள் உவமையாக வரும்போது இரண்டு பொருள்களுக்கும் பொதுவாய் பண்பு, தொழில், பயன் போன்றவையும் சேர்ந்து வரலாம்.*

***கான யானை கைவிடு பசுங்கழை***
***மீன் எறி தூண்டிலின் நிவக்கும்***
***கானக நாடனொடு (குறுந்தொகை, 54;3-5)***

*காட்டுயானைதன்துதிக்கையால்வளைத்துவிடப்பட்டபசுமையானமுங்கில்தூண்டியில் மீன்பட்டவுடன் மேல் எழ வீசுவது போல் மேல் எழுந்தது இப்பாடலில் தொழில், பண்பு அமைந்துள்ளது.*

**உவமையணியின் வகைகள்**

*அதுவே*

***விரியே தொகையே இதர விதரம்***
***உரைபெறு சமுச்சயம் உண்மை மறுபொருள்***
***புகழ்ந்தல் நிந்தை நியமம் அநியமம்***
***ஐயம் தெரிதரு தேற்றம் இன்சொல்***
***எய்திய விபரீதம் இயம்புதல் வேட்கை***
***பலபொருள் விகாரம் மோகம் அபூதம்***
***பலவயின் போலி ஒருவயின் போலி***
***கூடா உவமை பொதுநீங்கு உவமை***
***மாலை என்னும் பாலது ஆகும்***

***(தண்டியலங்காரம், நூற்பா.எ. 30)***

*இந்நூற்பவில் இருபத்துநான்கு வகையாக தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.*

**உவம உருபுகள்**

*போல, மான, புரைய, பொருவ, நேரகடுப்ப, நிகர, நிகர்ப்ப, ஏர, ஏய, மலைய, இயைய, ஒப்ப, எள்ள, உறழ, ஏற், அன்ன, அனைய, அமர, ஆங்க, என்ன, இகல, விழைய, எதிர, துணை, தூக்கு, ஆண்டு, ஆங்கு, மிகைதகை, வீழ, இணை, சிவன், கேழ், அற்று, செத்து பிறவும் என்று நூற்பாவில் கூறியுள்ளமையால் நாட, நக, நடுங்க, நந்த கள்ள, கருத காட்ட, மிளிர ஏய்ப்ப, மருள என்பவையும உவமை உருபுகளாகும். உவம உருபுகளாவது பொருளை விளங்கவைப்பதற்காகவே உள்ளன. இவை வெளிப்பட்டும், மறைந்தும் வருதலைக் காணமுடிகிறது. உவமையணிக்கு இவை அணிசேர்க்கும் வகையில் அமையப் பெற்றிரு்பதை அறியமுடிகிறது.*

***மாணிக்கவாசகரின் பண்பு உவமை***
***நாடகத்தால் உன் அடியார்***
***போல் நடித்து நான் நடுவே (திருச்சதகம் பா.எ. 11)***

*மெய்யன்பின்றி அன்புடையவனைப் போல நடித்து, உண்மையான வீட்டின்பத்தை அடையமுந்துகின்றேன்என்றுகூறுகிறார். இதுபண்புஉவமைஆகும். ஒருபொருளில்குணமாகிய பண்பை இன்னொரு பொருள் கொண்டு உவமித்துக் கூறுவதாகும். இப்பாடலில் தொடர்ந்து ஆடகச் சீர் மணிக்குன்று, இல்பொருள் உவமை என்று விளக்கப்படுகிறது. திருச்சதகத்துள் பிறவிக்கடலாக உருவகித்துரைக்கும் திருப்பாடலுள் முற்றுருவக அணி அமைந்துள்ளது.*

*மாணிக்கவாசகர் இவ்வுலக வாழ்வைத் துன்பமென எண்ணிக் கலங்குதலையும் அவரது பற்றற்ற நிலையினையும் தமது கவில்லாத மனநிலையினையும் கூறுவதை உவமைகளின் வாயிலாக அறியலாம்.*

*மத்திடு தயிராகி (திருச்சதகம் பா.எ.40) , தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன் (அடைக்கலப்பத்து பா.எ. 6) மாதா மத்தைக் கொண்டு கடைகின்ற தயிரானது சிதறுண்டு விடாமல் மோதிசுழல்வது போன்று நான் தளர்ச்சி அடைந்தேன் என்று பண்பினை குறிக்கக் கூடிய உவமையாக விளங்கி இருப்பதைக் காணமுடிகிறது.*

**உவம வழுவமைதி**

*உமேயமாகிய பொருளுக்கு மிக்கதாக உவமையை அமைத்தல், உவமைக்கு மிக்கதாக உபமேயத்தை அமைத்தல் இவை இவை மிகுதி. உபமேயத்திற்குக் குறைவாக உவமையை அமைத்தல், உவமைக்கு குறைந்ததாக உபமேயத்தை அமைத்தல் இவை குறைவு. உபமேயத்திற்குத் தாழ்ந்ததாக உவமையை அமைத்தல், உவமைக்குக் குறைந்ததாக உபமேயத்தை அமைத்தல் இவை தாழ்வு.*

*உயர்ந்தவற்றோடு தாழ்ந்தவற்றையும் தாழ்ந்தவற்றோடு உயர்ந்தவற்றையும் அமைத்தல், ஆண்பாலுக்குப் பெண்பாலும், பெண்பாலுக்கு ஆண்பாலும் வருதல், ஒன்றன் பாலுக்குப் பலவின்பாலும், பலவின்பாலுக்கு ஒன்றன் பாலும் வருதல் என அமைபவை எல்லாம் உவம வழுவமைதிகளாகும்.*

1. *மிகையாக வருதல்*
2. *குறைவாக வருதல்*
3. *தாழ்வு உயர்வு மாறுபாடு*

*என்ற வகையில் அமையபெறும்.*

***எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் (நீத்தல் விண்ணப்பம் பா.எ. 25.1)*** *பாடலின் பொருட்கண் 'அரிப்புண்டு' என வருகின்றமையின் உவமைக் கண்ணும், எறும்பிடை நாங்கூழ் அரிப்புண்டால் (நீத்தல் விண்ணப்பம் பா.எ. 25.2) என வருவதைக் காணலாம். மாணிக்கவாசகர் இறைவனின் திருமேனியை விளக்குகின்ற பகுதிகளைக் காணமுடிகிறது.*

*செக்கர் போலும் திருமேனி, செந்தழல் மேனி, தீமேனி, பொன்மலை, செந்தாமரைக் காடனைய மேனி, செச்சைமலர் மேனி, செம்பவளவெற்பு, பளிங்கின்திரள், தாமரைத்தாள், பொன்னும் மின்னும் அன்ன தோற்றம் ஞாயிறு போன்றவன் வீணையிசை போன்றவன், மடுச்சிறு தாணிமதி தாரைகை போலும் தலைமாலை, பூவின் நாற்றம் போன்று உயர்ந்து போன்ற சொற்களால் இறைவனின் நிலையினை உணர்த்துவதைக் காணலாம்.*

**தொழிலுவமையில் உவமை வழுவமைதி**

*மாணிக்கவாசகர் தம்மை மிகவும் இழிவுபடுத்திக்கூறும் உவமையை நோக்கும்போது, தொழிலுவமை என்பது இறைவனைப் போற்றிப்பாடுதலில் உவமை கூறினாலும், மாணிக்கவாசகரின் பாடலில் உவம வழுவமைதியே மிகுதியாகக் காணப்படுகின்றன. உயர்ந்தவற்றோடு தாழ்ந்தவற்றையும், தாழ்ந்தவற்றோடு உயர்ந்ததையும் உவமையாக அமைத்தல் இம்முறையினை மாணிக்கவசாகர் கையாண்டுள்ளார்.*

***ஒன்று ஆய் முளைத்து***
***எழுந்து எத்தனையோ கவடுவிட்டு***
***நன்று ஆக வைத்து என்னை***
***நாய் சிவிகை ஏற்றுவித்த*** ***(திருக்கோத்தும்பி, பா.எ.8)***

*நின்று தன்னிடமிருந்து எத்தனையோ கிளைகளைத் தோற்றுவித்தான் பரமன் என்னை நலமுடையவனாக வைத்து, பல்லக்கில் நாயை ஏற்றுவித்தது போன்று அடியார் நடுவில் இருக்க வைத்தான் என்று பாடுகிறார் இது பால் மாற்றி உவமைக் கூறினாலும் இதனை உவம வழுவமைதி எனக் கொள்கின்றனர் என்ற கருத்தினை அறியமுடிகிறது.*

*நாய்க்குத்தவிசிடல், நாய்க்குப் பொன்தவிசிடல், நாயிற்கடைப்பட்ட, கல்லைப்பிசைந்து கனியாக்கல் கல்நார் உரித்தல் பேன்ற சொற்களைப் பார்க்கும் போது மாணிக்கவாசகர் பாடல்களில் உவமை வழுவமைதி அதிகமாக இடம் பெற்று இருப்பதைக் காணலாம்.*

**அவையடக்கப்பாடல்களில் உவமை**

***வாயுறை வாழ்த்தே அவையடக்கியலே***
***செவியறிவுறூஉ வென அவையு மன்ன***

***(தொல்காப்பியம்.செய்யுளியல். 107)***

*அவையடக்கியலே அரிதல்தபத் தெரியின்*

***வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மின் என்று***
***எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே***

***(தொல்காப்பியம்.செய்யுளியல். 109)***

*என்று அவையடக்கம் பற்றி கூறியுள்ளார் தொல்காப்பியர். இதற்கு உரையாசிரியர்கள் பலரும் பல நிலைகளில் விளக்கம் தருகின்றனர்.*

*அவையடக்கப் பாடலே தன் நிலையினை விவரித்துக் கூறுவதாகும். மேலும், அவற்றுள் கூறப்படும் உவமையானது பொருளை எளிதில் விளங்கவைக்கக் கூடிய வகையில் அமையப் பெறுவதை நாம் அறியலாம்.*

*ஆனால் மாணிக்கவாசகர் ஒவ்வொரு பாடலிலும் அவையடக்கப் பண்பினைக் கடைபிடிக்கிறார். எந்த நிலையிலும் இறைவனுக்கு அடிபணிந்து மிகவும் கீழாகத் தன்னைக் காட்டிக் கொள்கிறார்.*

*நாயினுக்குங் கீழாகத் தன்னைக் காட்டிக்கொள்கிறார். இவை அவையடக்க நிலையிலே இருப்பது நமக்குப் புலனாகிறது எனலாம்.*

**தாழ்வு-உயர்வு மாறுபாட்டு உவமை**

*தாழ்வாகவும் உயர்வாகவும் பால்மாறுபாடாகவும் உவமைகளைக் கூறுவது இவ்வகையாகும்.*

***மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர்***
***மின்மினியும் வெஞ்சுடரோன் போல்விளங்கும் - அன்னப்***
***பெடைபோலும் சந்திரன் பைந்தடங்கள் போலும்***
***மிடைமாசு ஒன்றில்லா விசும்பு***

***(தண்டியலங்காரம், நூற்பா.எ. 31)***

*மன்னரிடத்தில் நாய் நன்றியறதலுடன் நடப்பதுபோல வாளினை உடைய வீரர் நடப்பதால் நாய்க்கு ஒப்பர். மின்மினிப்பூச்சியும், கதிரவன் போல ஒளிர்கின்றது. பெண் அன்னத்தைப் போன்றது சந்திரன் குளிர்ச்சி பொருந்திய தடாகம் போலக் குற்றமில்லாத வானம் விளங்குகின்றது.*

*தாழ்வு - வாள் வீரரரை நாய்க்கு உவமையாகக் கூறுவது.*
*உயர்வு - மின்மினிப்பூச்சியைக் கதிரவனுக்கு உவமைகயாக கூறுவது.*
*பால்மாறுபாடு-அன்னப் பெடையைச் சந்திரனுக்கு உவமையாகக் கூறுவது.*
*என்பதனை அறியலாம்.*

*தாழ்வு உயர்வு மாறுபட்டு உவமையானது பெருமபாலும் மாணிக்கவாசகர் பாடலில் இடம் பெற்று இருப்பதை அறியலாம். ஏனெனில் இறைவனை உயர்வாகவும், தன்னைத் தாழ்வாகவும் காட்டக் கூடிய மனப்பாங்கு மாணிக்கவாசகர் இடையே நிலவியிருப்பதைக் காணலாம். மாணிக்கவாசகரின் உவமைகளைக் காணும்போது பெரும்பாலும் பொருள் விளங்கவும், இறைவனை அடையும் வழியினையும் அழகாக எடுத்தியம்பியுள்ளமை சிறப்பாகும்.*

***பாலோடு தேன் கலந்தாற்போல***
***கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்***

***(சிவபுராணம் பா.எ.46)***

*கறந்த ஆவின் பாலோடு கரும்புச் சாற்றினையும், நெய்யினையும் கலந் உண்ணும் போது உண்டாகும் இன்பம் போன்து இவைனிடதிலிருந்து வரும் பேரின்பம் அப்பேரின்பமோ நல்ல அடியவர்களின் உள்ளத்தில் தேன்போன்று ஊறித் தெவிட்டாது தித்திக்கிறது.*

***வெஞ்சேலனைய கண்ணார்தம்***
***வெகுளிவலையில் அகப்பட்டு*** ***(ஆசைப்பத்து பா.எ. 10)***

*காமவலையில் சிக்கி மெலிந்தவன் நான் என்று கூறுகிறார். 'அனைய' என்ற உருபினைப் பயன்படுத்தி உள்ளார்.*

***ஆரா நின்றார் அடியேனும் அயலார்***
***போல அயர்வேனோ*** ***(பிரார்த்தனைப்பத்து பா.எ.9)***
*மனதை ஒருங்குப்படுத்தும் நிலையினை காணமுடிகிறது.*

***மின்னே ரனைய பூங்கழல்கள்***
***அடைந்தார் கடந்தார் வியனுலகம்*** ***(ஆனந்தமாலை பா.எ. 1)***

*வற்றல் மரம் போல் நிற்பேனோ (பிரார்த்தனைப்பத்து பா.எ.11)*

*இவ்வாறு உவமையைப் பயன்படுத்துவதில் வல்லவராய் இருப்பது சாலச்சிறந்ததாக அமைகிறது.*

**முடிவுரை**

*கவிதைக்கு அழகு தருவன அணிகள் அணிகளில் தலையாய அணி உவமையணி ஆகும். கவிஞன் எண்ணிய கருத்தை எண்ணியவாறே படிப்பவரின் மனதில் பதிய வைக்கும் இயல்புடையது இவ்வணியாகும். ஒரு பொருளை அழகுற நிறுத்தி வைக்க இவ்வணி பயன்படுகிறது. தெய்வக்கவிஞராகிய மாணிக்கவாசகப் பெருமான் ஆன்ம அறிவிற்கு அப்பாற்பட்ட சிவபோக நுகர்ச்சி முதலியவற்றை உவமை வழியாகச் சொல்லி விளக்கும் இயல்பைக் காணமுடிகிறது. உவமையின் மூலம் தான் கூறவந்த கருத்தினை மிக அழகாக எழுத்துரைக்கிறார். உவமையணி தாயணி என்றே அழைக்கப்படுகிறது. அனைத்து அணிகளுக்கும் பொதுவாய் அமைகின்றது. அவ்வகையில் மாணிக்கவாசகர் தன்னுடைய பாடல்களில் 'நாயினை' உவமைக்காட்டியிருப்பது தன்னை நாயைவிட சிறியோனாகக் காட்டுவது. இறைவனின் பெருமையினையும், ஆன்மாவின் சிறுமை குணங்களையும் ஒப்பிடுவதாய் அமைந்துள்ளது. இருப்பினும் உவமை நயங்களைச் சிறப்பாக கையாண்டமை புலனாகிறது.*

**துணைநூற்பட்டியல்**

1. *அருணைவடிவேல் முதலியார்.சி, திருவாசகம் உரை, (1966), தருமையாதீனம் வெளியிடு, திருவாவடுதுறை.*
2. *ஆன்ந்தராசன்.ஆ, திருவாசகம், (2019),நர்மதா பதிப்பகம், தியாகராய நகர், சென்னை.*
3. *சுபாஷ் சந்திரபோஸ் .ச, தண்டியலங்காரம், (2016), இயல் வெளியீடு, தஞ்சாவூர்.*
4. *தமிழண்ணல், தண்டியலங்காரம், (2004), மீனாட்சி புத்தக நிலையம், தானப்பமுதலி தெரு, மதுரை.*
5. *பசுபதி.ம.வே.,செம்மொழித் தமிழ், (20160, தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர்.*

## References

1. *Arunaivadivel Mudaliar.C, Thiruvasagam Text, (1966), Darumaiyatheenam Publishing, Thiruvavaduthurai.*
2. *Anndharasan A, Thiruvasakam, (2019), Narmada Publishing House, Thiagaraya Nagar, Chennai.*
3. *Subhash Chandra Bose, Dandiyalankaram, (2016), Iyal Publication, Thanjavur.*
4. *Tamilannal, Thandialankaram, (2004), Meenakshi Bookstore, Thanapamudi Street, Madurai.*
5. *Pasupathi M.V., Semmozhith Tamil, (20160, Tamil University. Thanjavur.*